ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் |
| திகதி | 2020 யூலை 07 |

**இலங்கை மத்திய வங்கியானது தொடரேட்டு தொழில்நுட்பத்தின் (Blockchain Technology) அடிப்படையில் அமைந்த உங்களது வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் முன்னோடித் திட்ட வடிவமைப்புச் செயன்முறையினைத் தொடங்குகின்றது**

இலங்கை மத்திய வங்கியானது தொடரேட்டு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அமைந்த உங்களது வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் முன்னோடித் திட்ட வடிவமைப்புச் செயன்முறையினைத் தொடங்குவதற்கு 2020 யூலை 7ஆம் திகதியன்று ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டுள்ளது. இலங்கையின் நிதியியல் பணிகளுக்கான சாத்தியமான நன்மைகளை இலங்கை மத்திய வங்கி 2018இல் இனங்கண்டு வங்கிகள் அதேபோன்று தகவல் தொழில்நுட்ப தொழிற்துறை என்பவற்றின் தன்னார்வ பங்கேற்புடன் தொடரேட்டு தொழில்நுட்பம் பற்றிய தொழிற்துறைகளுக்கிடையிலான ஆய்வுகளைத் தொடங்கியது. பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்துகொள்ளுங்கள் தீர்வொன்றினை உருவாக்கி இலங்கையின் தொடரேட்டு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அமைந்த நிதியியல் பணித் தீர்வுகளுக்கு வழியமைப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்தது. பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுவதற்கான தொடரேட்டு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அமைந்த தீர்வுகளை உருவாக்குவதில் அனுபவமிக்க கம்பனிகளைத் தன்னார்வ அடிப்படையில் இக்கருத்திட்டத்துடன் இணையுமாறு இலங்கை மத்திய வங்கி விளம்பரப்படுத்தியது. பல எண்ணிக்கையான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில், இலங்கை மத்திய வங்கியானது சமகாலத்தில் நிகழத்தக்க விதத்தில் தொடரேட்டு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அமைந்த உங்களது வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் முன்னோடித் திட்ட வடிவமைப்பினை உருவாக்குவதற்கு மூன்று விண்ணப்பதாரிகளைத் தெரிவுசெய்தது.

தொடரேட்டு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அமைந்த உங்களது வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் முன்னோடித் திட்ட வடிவமைப்பினை உருவாக்குவதற்கு 17 வெளிநாட்டுக் கம்பனிகள் உட்பட 40 இற்கும் மேற்பட்ட கம்பனிகள் தனிப்பட்ட ரீதியாகவும் இணைந்தும் விண்ணப்பித்திருந்தன. பல்வேறு தெரிவுச் சுற்றுகளின் பின்னர் இலங்கையில் இம்முன்னோடி கருத்திட்டத்தினைப் பொறுப்பளிப்பதற்கு மூன்று விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்பட்டனர். இணைந்த விண்ணப்பதாரிகளாக கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பாடசாலையுடன் ஒன்றிணைந்து சம்பத் வங்கி பிஎல்சியும், சுவீடனின் நோர்புளக் ஏபீ நிறுவனமும் அத்துடன் இணைந்த விண்ணப்பதாரிகளாக இரண்டும் இலங்கைக் கம்பனிகளான யால லப்ஸ் (பிறைவெட்) லிமிடெட் மற்றும் லீனியர்சிக்ஸ் (பிறைவெட்) லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் தெரிவுசெய்யப்பட்டன. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையிலான ஒப்பந்தங்கள், இலங்கை

மத்திய வங்கியின் ஆளுநர் தேசமான்ய டபிள்யூ. டி லக்ஷ்மன் அவர்களின் பங்கேற்புடனும் வங்கியின் மூத்த வங்கி அலுவலர்களின் பிரசன்னத்துடனும் கைச்சாத்திடப்பட்டன.

இது தொடர்பில் ஆளுநர் கருத்து தெரிவிக்கையில் "எமது வாழ்வின் ஒவ்வொரு அம்சமும் டிஜிட்டல் மயமாக தோற்றம்பெறுகின்ற இவ்வுலகில் நாம் வாழ்வதற்கேற்ற விதத்தில் இலங்கை மத்திய வங்கியானது இலங்கையின் டிஜிட்டல் நிதியியல் கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கு மிகையான முயற்சிகளை எடுத்துள்ளது. உங்களது வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் தகவல்களைப் பாதுகாப்பாக பகிர்ந்துகொள்ளும் பொருட்டு தொடரேட்டு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் சாத்தியம் பற்றி மதிப்பிடுவது என்பது இலங்கையின் டிஜிட்டல் ரீதியான நிதியியல் வசதிக்குட்படுத்தலைப் பாரியளவில் அதிகரிப்பதற்கான வாய்ப்பினைக் கொண்டுள்ளது. டிஜிட்டல் மற்றும் புதிய சூழலுக்கு புதிய ஊழியர்களை ஒருங்கிணைத்தல் என்பன ஊடாக நிதியியல் பணிகளுக்கான அணுகுவழியினை அதிகரிப்பதற்கு பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுதல் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கான வழிகளைத் திறந்துவைக்கின்றது" எனக்குறிப்பிட்டார்.

தேசிய கொடுப்பனவு சபையின் தலைவராக, இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநர் திரு. எச். ஏ. கருணாரத்ன குறிப்பிடுகையில் இத்தேசிய கருத்திட்டத்துடன் இணைவதற்கு உலகம் முழுவதுமிருந்து கம்பனிகள் ஆர்வம் காட்டின எனவும் மிகவும் போட்டிவாய்ந்த தெரிவுச் செயன்முறையினை ஏற்படுத்தியிருந்தது எனவும் குறிப்பிட்டார். அனைத்து விடயப்பரப்புகளிலும் இலங்கையில் டிஜிட்டல் புத்தாக்கத்தினை ஊக்குவிப்பதற்கும் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் ஒழுங்குமுறைப்படுத்துநரின் தலைமையில் தொழில்துறைகளுக்கிடையிலான முன்முயற்சியின் முக்கியத்துவத்துவம் பற்றியும் வலியுறுத்தினார்.

உதவி ஆளுநர் திரு. ஏ. ஏ. ஜயலத், தொடரேட்டு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அமைந்த உங்களது வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் முன்னோடித் திட்ட வடிவமைப்பு பற்றி கண்டறியப்பட்டவையின் நன்மைகள் இலங்கைக்கு மாத்திரமின்றி உலகளவிலும் நிதியியல் பணிகளுக்காக தொடரேட்டு தொழில்நுட்பத்தினைப் பிரயோகிப்பது பற்றிய புரிதலினை முன்னேற்றுவதற்கு உதவுகின்றது என்பதனை எடுத்துக்காட்டினார்.

டிஜிட்டல் ரீதியான கொடுக்கல்வாங்கல்கள் எண்ணற்ற நன்மைகளை வழங்குவதன் காரணமாக அதனை ஊக்குவிப்பதற்கான பயணத்தில் இலங்கை தடம்பதித்துள்ளது என கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் பணிப்பாளர் திரு. டி. குமாரதுங்க குறிப்பிட்டார். தொடரேட்டு தொழில்நுட்பம் மீதான பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளர்களை அறிந்துகொள்ளும் வசதிக்காக முன்னோடித் திட்ட வடிவமைப்பினை கொண்டிருப்பது நாட்டில் நிதியியல் பணிகளை முன்னேற்றுவதில் சந்தேகமின்றி உதவியளிக்கும் என்பதனை எடுத்துக்காட்டினார்.



அமர்ந்திருப்போர் இடமிருந்து வலம்: திரு. நந்தா பர்ணாந்து, முகாமைத்துவப் பணிப்பாளர், சம்பத் வங்கி பிஎல்சி, திரு. ஆர். ஏ. ஏ. ஜயலத், உதவி ஆளுநர், இலங்கை மத்திய வங்கி மற்றும் பேராசிரியர் ஹேவாகமகே, பணிப்பாளர், கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பாடசாலை.
எழுந்து நிற்போர் இடமிருந்து வலம்: திரு. டி. குமாரதுங்க, பணிப்பாளர் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள், இலங்கை மத்திய வங்கி, தேசமான்ய பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஷ்மன், ஆளுநர், இலங்கை மத்திய வங்கி மற்றும் திரு. எச். ஏ. கருணாரத்ன, துணை ஆளுநர், இலங்கை மத்திய வங்கி.



அமர்ந்திருப்போர் இடமிருந்து வலம்: திரு. லலின் டயஸ், பிரதம நிறைவேற்று அலுவலர், யால லப்ஸ் (பிறைவேட்) லிமிடெட், திரு. ஆர். ஏ. ஏ. ஜயலத், உதவி ஆளுநர், இலங்கை மத்திய வங்கி மற்றும் திரு. மரியோ குணரத்ன, பிரதம நிறைவேற்று அலுவலர், லீனியர்சிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட்.
எழுந்துநிற்போர் இடமிருந்து வலம்: திரு. டி. குமாரதுங்க, பணிப்பாளர், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள், இலங்கை மத்திய வங்கி, தேசமான்ய பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஷ்மன், ஆளுநர், இலங்கை மத்திய வங்கி மற்றும் திரு. எச். ஏ. கருணாரத்ன, துணை ஆளுநர், இலங்கை மத்திய வங்கி



இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஷ்மன் உடன்படிக்கையினை சம்பத் வங்கி பிஎல்சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. நந்தா பர்ணாந்து மற்றும் கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பாடசாலை, பணிப்பாளர், பேராசிரியர் ஹேவாகமகே ஆகியோருடன் பரிமாற்றிக்கொண்டார்.

இடமிருந்து வலம்: திருமதி. கே. அம்பகஹவிட, மூத்த உதவிப் பணிப்பாளர், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, முனைவர் கசுன் டி சொய்சா, கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பாடசாலை, பேராசிரியர் ஹேவாகமகே, பணிப்பாளர், கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பாடசாலை, திரு. அஜித் சல்கொட, குழும பிரதம தகவல் அலுவலர், சம்பத் வங்கி, திரு. எச். ஏ. கருணாரத்ன, துணை ஆளுநர், இலங்கை மத்திய வங்கி, தேசமான்ய பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஷ்மன், ஆளுநர், இலங்கை மத்திய வங்கி, திரு. நந்தா பர்ணாந்து, முகாமைத்துவப் பணிப்பாளர், சம்பத் வங்கி பிஎல்சி, திரு. ஆர். ஏ. ஏ. ஜயலத், உதவி ஆளுநர், இலங்கை மத்திய வங்கி, திரு. டி. குமாரதுங்க, பணிப்பாளர், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள், இலங்கை மத்திய வங்கி, திரு. நுவன் விக்ரமநாயக்க, மூத்த முகாமையாளர், சம்பத் வங்கி, திரு. பசான் மனுகித், உதவிப் பொது முகாமையாளர் - தகவல் தொழில்நுட்பம், சம்பத் வங்கி



இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தேசமான்ய பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஷ்மன் உடன்படிக்கையினை யால லப்ஸ் (பிறைவேட்) லிமிடெட் பிரதம அலுவலர் திரு. லலின் டயஸ் மற்றும் லீனியர்சிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட்டின் பிரதம நிறைவேற்று அலுவலர் திரு. மரியோ குணரத்ன ஆகியோருடன் பரிமாற்றிக்கொண்டார்.

இடமிருந்து வலம்: திரு. தரிந்து திசாநாயக்க, யால லப்ஸ், திரு. இஹ்சான் விஜயதுங்க, லீனியர்சிக்ஸ், திரு. மரியோ குணரத்ன, பிரதம நிறைவேற்று அலுவலர் யால லப்ஸ், திரு. எச். ஏ. கருணாரத்ன, துணை ஆளுநர், இலங்கை மத்திய வங்கி, திரு. லலின் டயஸ், பிரதம நிறைவேற்று அலுவலர், யால லப்ஸ் (பிறைவேட்) லிமிடெட், தேசமான்ய பேராசிரியர் டபிள்யூ டி லக்ஷ்மன், ஆளுநர், இலங்கை மத்திய வங்கி, திரு. ஆர். ஏ. ஏ. ஜயலத், உதவி ஆளுநர், இலங்கை மத்திய வங்கி, திரு. டி. குமாரதுங்க, பணிப்பாளர் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள், இலங்கை மத்திய வங்கி, திருமதி. கே. அம்பகஹவிட, மூத்த உதவிப் பணிப்பாளர், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி



இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர். டபிள்யூ. டி. லக்ஷ்மன், சம்பத் வங்கி பிஎல்சி, கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பாடசாலை, நோர்புளக் ஏபீ, யால லப்ஸ் (பிறைவெட்) லிமிடெட் மற்றும் லீனியர்சிக்ஸ் (பிறைவெட்) லிமிடெட் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றுகின்றார்.